

அருப்புக்கோட்டை ஸ்ரீ சௌடாம்பிகா பொறியியல் கல்லூரியின் வெள்ளி விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு புதுதில்லி வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவர் த சரவணகுமார் ஆகியோர் கலந்துகொண்டு, விழாவை சிறப்பித்தனர். உடன் செயற்குழு உறுப்பினர் சுப்பாராஜா, ஷாகுல் ஹமீது, நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே. மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி, ஒன்றியச் செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ், நெசவாளர் அணி பழனிச்சாமி, மல்லாங்கிணறு போஸ் என்ற ஜெயச்சந்திரன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள், மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மேற்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் பி.ஆர்.எஸ். வேல் மகாலில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பூத்(மண்டல) பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள், மாவட்டம், பகுதி, வார்டு சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் துறை வளர்ச்சியில் கடும் தேக்கம்!

## விவசாயிகள் மற்றும் MSME நிறுவனங்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசிற்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

*புதுடெல்லி, மார்ச் 23-*

இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் துறை வளர்ச்சிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு குறித்தும், அதை அடைய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்றத்தில் ஒன்றிய உணவு பதப்படுத்துதல் அமைச்சகத்திடம் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.



இந்த துறையின் வளர்ச்சி பெருமளவில் தேக்கமடைந்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது. எந்தவிதமான தொலைநோக்குப் பார்வையும், உறுதியான நடவடிக்கைகளும் இல்லாமல், நம் நாட்டின் விவசாயிகள் மற்றும். லட்சக்கணக்கான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எதிர்காலத்தை ஒன்றிய அரசு கேள்விக்குறியாக்கியுள்ளது.

1. மிக மந்தமான வளர்ச்சி - ஒன்றிய அரசிற்கு இலக்கு என்று எதுவுமில்லை:

ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலின்படி, உணவு பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சி, 2023-24ல் 2.24 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, அடுத்த 6 ஆண்டுகளில் வெறும் 2.87 லட்சம் கோடி ரூபாயாக மட்டும் உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு 4% அளவிலான மிக மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம்.

இந்தியாவின் விவசாய பலத்திற்கு தற்போதைய வளர்ச்சியே போதுமானதல்ல என்று வல்லுநர்கள் கூறும் நிலையில், இந்த 4% வளர்ச்சி இலக்கை வைத்து என்ன செய்வது? மேலும், பணவீக்க விகிதமே ஆண்டுக்கு 5% என்ற நிலையில், இதனால் என்ன பயன்?

2. விவசாயிகள் மற்றும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு வஞ்சகம்:

“விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம்” என்பது, இந்த ஒன்றிய அரசு தேர்தலுக்கு தேர்தல் முன்வைக்கும் முழக்கம். ஆனால், விவசாயிகளின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும் உணவு பதப்படுத்தல் துறையில், அவர்களுக்கான நலனை புறந்தள்ளி வருகிறது ஒன்றிய அரசு.

விவசாயிகள் உணவு பதப்படுத்துதல் துறைக்கு அதிகப் பங்காற்றுவதற்காக இருந்த CBFL (Creation of Backward and Forward Linkages) திட்டங்களை இந்த அரசு 2021LD ஆண்டு நிறுத்தி விட்டது. அது முதல், இடைத்தரகர்களின் ஆதிக்கத்தில் விவசாயிகள் சிக்கித் தவிக்கிறார்கள். ஒன்றிய அரசு பெரிதாகப் பேசும் Agri Infra Fundம், அவர்களை மேலும் கடனாளிகள் மட்டுமே ஆக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த துறையில் பெருமளவு பங்களிக்கும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை எடுத்துக் கொண்டால், அங்கும் PLI (Production Linked Incentive) திட்டத்தை முக்கியத்துவப் படுத்தி, அவர்களுக்குப் பதில் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் பலனடைய வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. PMFME (Pradhan Mantri Formalisation of Micro Food Processing Enterprises) திட்டம் அவர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, வங்கிகளால் அலைக்கழிக்கப்படுவதையே உறுதிப்படுத்துகிறது.

3. தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு மற்றும் ஈரோடு:

இந்திய அளவில் அளவில் அதிக விவசாய உற்பத்தித் திறன் கொண்ட மாநிலங்களில் ஒன்றாகவும், ஒன்றியத்திற்கு அதிக வரி வருவாய் அளிக்கும் மாநிலமாகவும் திகழ்கிறது தமிழ்நாடு. ஆனாலும், தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை ஒன்றிய அரசு.

மெகா உணவு பூங்காக்கள் திட்டம் நடைமுறையில் இருந்த ஆண்டுகளில், தமிழ்நாட்டிற்கு 1ம், மற்ற பல மாநிலங்களுக்கு 3,4 என்ற அளவிலும் ஒதுக்கப்பட்டன. அந்த ஒன்றின் பணியும் இதுவரை முடிந்த பாடில்லை.

தற்போது, PLI திட்டத்தில் குறைவான தமிழ்நாடு நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி உள்ளிட்ட நடவடிக்கைகளால், புறக்கணிப்புச் செயலை உச்சக் கட்டத்தில் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

எனது தொகுதியான ஈரோட்டைப் பற்றி பேசினால், நியாயப்படி இங்கு அமையவேண்டிய மஞ்சள் வாரிய அலுவலகத்தை தெலுங்கானாவுக்கு மாற்றியது. இதனால், ஈரோட்டு மஞ்சளின் சர்வதேச சந்தைப்படுத்தல் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. மேற்கொண்டு, மண்டல அலுவலகம் அமைத்தல், மதிப்புக் கூட்டலுக்கான ஆய்வகம் அமைத்தல் போன்றவற்றிலும் ஈரோட்டிற்கு துரோகம் மட்டுமே இழைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயிகள் என்றால், அந்த விவசாயிகளின் முதுகெலும்பு உணவு பதப்படுத்துதல் துறையில் தான் உள்ளது. மேலும், இந்த துறையைச் சுற்றி லட்சக்கணக்கான சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் வாழ்வாதாரமும், பல லட்சக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்பும் உள்ளன.

இப்படிப்பட்ட மிகமுக்கியத் துறையின் வளர்ச்சியை, தமிழ்நாடு உள்ளிட்ட அதிக உற்பத்தி மாநிலங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து ஒன்றிய அரசு முன்னேற்ற வேண்டும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்புரை!

# மயிலாடுதுறையில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

*மயிலாடுதுறை, மார்ச் 23 -*

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டமயிலாடுதுறை நகர கழகம், மயிலாடுதுறை மேற்கு கிழக்கு ஒன்றிய கழகம், குத்தாலம் வடக்கு ஒன்றிய கழகம் மற்றும் குத்தாலம் பேரூர் கழகம் ஆகியவற்றின் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2) மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் செயல்வீரர்கள் கூட்டம் மயிலாடுதுறை ஏ.ஜே.கே. திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம்.மூர்த்தி, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.முருகமணி, குத்தாலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கு. வைத்தியநாதன், குத்தாலம் பேரு செயலாளர் எம். சம்சுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் நகர மன்ற தலைவர் குண்டாமணி (எ)என்.செல்வராஜ் வரவேற்றார்

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி சிறப்புரையற்றினார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் எஸ். செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், பி சிவதாஸ்,

நத்தம் ஏ. வின்சென்ட், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, எஸ்.செல்வராஜ், இரா மனோகரன், வி.எஸ்.பிரபாகர், இராஜ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி. திருமாவளவன், விஜய், சௌ.சர்வோதயன், மயிலாடுதுறை நகர் மன்ற துணைத் தலைவர் எஸ். சிவகுமார், மயிலாடுதுறை நகர கழக நிர்வாகிகள் ஆர்.நடராஜன், மலைக்கோயில் எம்.பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம், மேனகாமாரியப்பன், எம்.குமார், மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் எம். பாலு ,ஜி. இளஞ்செழியன், ஆர்.கே.சரவணன், எஸ்.குமாரசாமி, டி. சிவக்குமார், எஸ்.அற்புதராஜ், பாரதிமதியழகன், ஆர். கருணாநிதி, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் சிவ. கோபாலகிருஷ்ணன், கே. ராஜேந்திரன், ஜி. அசோகன், எஸ். வெங்கடேசன், சி.மதரகோபால்,. இதயச்சந்திரன், பத்மாதேவிசீனிவாசன், சபரிராஜா, குத்தாலம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏ.செல்ல குட்டி, வெங்கட்ராஜ் சாமிசெல்வம், மு.புகழேந்திரன், செந்தில்குமார் அருணா ரவி, சம்சுநிஷாஹாஜா மைதீன், வெடி எஸ். பால முருகன், குத்தாலம் பேரூர் கழக நிர்வாகிகள் பி. கோபால கிருஷ்ணன்,, ப.உலகநாதன், எஸ். ஐயப்பன். கே.குமார், எஸ்.சுந்தர்ராஜன், ச.செந்தில், வி.கண்ணையன் மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளில் முன்னாள் பிரதிநிதி கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

கழகத் தலைவர் தளபதியின் தாரக மந்திரமான வெல்வோம் 200 + , படைப்பு வரலாறு! என்பதற்கு இனங்க கழகத் தலைவர், திராவிட மாடல் அரசர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செய்த மகத்தான சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்துக்கூறி, பிரச்சாரம் செய்து அனைவரையும் தி.மு.க. வாக்காளர்களாக மாற்றி, கழகத் தலைவர் தளபதி அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிப் பெற கழக நிர்வாகிகள், கழகத்தினர் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி வெற்றிக்கு உழைத்து கழகத் தலைவர் கரத்தை உயர்த்தி தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட மாடல் அரசு 2.0 அமைய மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி கழகத் தலைவர் அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற செய்ய ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தினர் பாடுபடுவோம் என்றும்,

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7 வது முறையாகவும், கழகத் தலைவர் தளபதி தலைமையில் 2 முறையாக முதல்வராக கழக ஆட்சி அமைந்திட உழைத்திடுவது என்றும்,


தலைமை கழகத்தால் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள்

(பி.எல்..சி) ஆகியோரிடம் வாக்காளர் பற்றிய முழு விபரம் குறித்து கணக்கெடுப்பு எடுக்க வழங்கப்பட்ட நோட்டை உடன் முழுமையாக பூர்த்தி செய்து அந்த பணியை முடித்து ஒன்றிய கழக செயலாளர்களிம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ. 2 ) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்.. சி).யினர் வழங்கிடவேண்டும். என்றும், ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பூத் வாரியாக ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறியும், 5 ஆண்டு கால திராவிட மாடல் அரசால் அந்த குடும்பத்தினர் பெற்ற நலத்திட்ட உதவிகளை எடுத்துக்கூறி பிரச்சாரம் மேற்கொண்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படையினருக்கும், மகளிர் படையினருக்கு உரிய ஏற்பாடுகளை செய்த ஒன்றிய, பேரூர் செயலாளர்களுக்கும், உறுதுணையாக நின்ற கிளை, வார்டு கழக நிர்வாகிகளுக்கும் கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், கழக நிர்வாகிகள் புதிய வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்து கழகம் மற்றும் கழக ஆதரவு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை வரும் 26 ஆம் தேதிக்குள் படிவம் 6 பூர்த்தி செய்து தேர்தல் அலுவலரிடம் வழங்கி வாக்காளர் சேர்த்தல் முயற்சியில் கழகத்தின் ஈடுபட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கி. திராவிடமணி**

**மார்ச் 23 (2016)**



**தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**திராவிட இயக்கத்தின்மீது கொண்ட பற்றின் காரணமாக மருதமுத்து என்ற தனது இயற்பெயரை பேரறிஞர் அண்ணா அவர்களால் திராவிடமணி என்று பெயர் மாற்றிக் கொண்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றிய

# வாக்குச்சாவடி முகவர்கள் - கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மயிலாடுதுறை, மார்ச் 23 –

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்கு உட்பட்ட செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியங்கள் மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றியம் ஆகியவற்றின் வாக்குச் சாவடி முகவர்கள் (பி. எல்.ஏ. 2) மற்றும் கழக செயல்வீரர்கள் கூட்டம் செம்பனார்கோயிலில் பி.கே.சி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் பி.எம்.அன்பழகன் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமிர்த.விஜயகுமார், சீர்காழி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பஞ்சு. குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல் மாலிக் வரவேற்றார். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி. என்.விஜயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஹர்ஷத், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட்., தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி குமரவேல், முன்னாள் ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாஸ்கர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், காளி தேசப்பன், சம்சுதீன், வைத்தியநாதன், வி.எஸ் பிரபாகர், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் டாக்டர் வீரபாண்டியன், செம்பனார்கோயில் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றியக் கழக நிர்வாகிகள் சுப்பையன், நெடுமாறன், சத்தியராஜ், அமுதாஅன்பழகன், சரவணன், பிரபாகர், கே. எஸ்.கருணாநிதி, ஈச்சங்குடி இளங்கோவன், கண்ணங்குடி கணேசன், ரங்கநாதன் சங்கர், சாந்திவேல்முருகன், கருணாநிதி, சிவகுமார், தெட்சிணா மூர்த்தி, சாரா சேகர், தங்கவேல், பாண்டு மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் ஏ.சடகோபன், எஸ்.கந்தசாமி. மதியழகன். சரவணன், ராஜா மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டப் பிரதிநிதி தென்னரசன் நன்றி கூறினார்.

**தீர்மானங்கள்!**

கூட்டத்தில் கழகத் தலைவர் தளபதியின் தாரக மந்திரமான வெல்வோம் 200 +, படைப்பு வரலாறு! என்பதற்கு இணங்க கழகத் தலைவர், திராவிட மாடல் அரசர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் செய்த மகத்தான சாதனைகளை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எடுத்துக்கூறி குறிப்பாக பெண்களுக்கு மகளிர் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ 1,000 ஆகிய வற்றை எடுத்து கூறியும், அடுத்து கழக ஆட்சி அமைந்த உடன் மகளிர் உரிமைத் தொகை ரூ.2.000 ஆக உயர்த்தப்படும் என்று கூறி பிரச்சாரம் செய்து அனைவரையும் தி.மு.க. வாக்காளர்களாக மாற்றி, கழகத் தலைவர் தளபதி அறிவிக்கும் வேட்பாளரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற கழக நிர்வாகிகள், கழகத்தினர் வெற்றிக்கு உழைத்து கழகத் தலைவர் கரத்தை உயர்த்திடுவது என்றும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7 வது முறையாகவும், கழகத் தலைவர் தளபதி தலைமையில் 2 முறையாக முதல்வராக கழக ஆட்சி அமைந்திட உழைத்திடுவது என்றும்,

தலைமை கழகத்தால் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி) ஆகியோரிடம் வாக்காளர் பற்றிய முழு விபரம் குறித்து கணக்கெடுப்பு எடுக்க வழங்கப்பட்ட நோட்டை உடன் முழுமையாக பூர்த்தி செய்து அந்த பணியை முடித்து ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களிம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (பி.எல்..சி.) யினர் வழங்கிடவேண்டும். என்றும், ஒன்றிய பேரூர் பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பூத் வாரியாக ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறியும், 5 ஆண்டு கால திராவிட மாடல் அரசால் அந்த குடும்பத்தினர் பெற்ற நலத்திட்ட உதவிகளை எடுத்துக் கூறி பிரச்சாரம் மேற்கொண்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படையினருக்கும், மகளிர் படையினருக்கு உரிய ஏற்பாடுகளை செய்த ஒன்றிய, பேரூர் செயலாளர்களுக்கும், உறுதுணையாக நின்ற கிளை, வார்டு கழக நிர்வாகிகளுக்கும் கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.